ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| --- | --- |
| திகதி | 24.03.2017 |

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.2 - 2017

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகள் 2016இல் இலங்கையின் பொருளாதாரம் 2015இன் 4.8 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் உண்மை நியதிகளில் 4.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிட்டுள்ளது. ஆண்டு வளர்ச்சி வீதத்திற்குள் கைத்தொழில் தொடர்பான நடவடிக்கைகள் கட்டுமானம் தொடர்பான நடவடிக்கைகளின் தூண்டுதலினால் 6.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்த வேளையில் நிதியியல் பணிகள், காப்புறுதி மற்றும் தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் முக்கிய காரணமாக பணிகள் தொடர்பான நடவடிக்கைகள் 4.2 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், 2016இல் வேளாண்மை தொடர்பான நடவடிக்கைகள் 4.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு இரண்டாம் காலாண்டுப் பகுதியில் நிலவிய வெள்ளம் மற்றும் 2016இன் இறுதிக் காலாண்டில் நிலவிய வரட்சி என்பனவற்றின் காரணமாக நிரம்பல் பக்கத்தில் ஏற்பட்ட தடங்கல்களே காரணமாகும். மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் உலகளாவிய நிகழ்வுகள் போன்ற சவால்மிக்க வெளிவாரிக் காரணிகளுக்கு மத்தியிலும் 2016 இறுதியில் விரைந்த வளர்ச்சி அவதானிக்கப்பட்டமைக்கு 2016இன் இறுதிக் காலாண்டில் 5.3 சதவீதம் கொண்ட வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டமை காரணமாக விளங்கியதுடன் இதற்கு தளத் தாக்கமும் ஓரளவு உதவியாக அமைந்தது.

அதேநேரம், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (2013=100) ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2017 சனவரியின் 5.5 சதவீதத்திலிருந்து 2017 பெப்புருவரியில் 6.8 சதவீதத்திற்கு விரைவடைந்தது. இதையொத்த போக்கு முதன்மைப் பணவீக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் (2013=100) அவதானிக்கப்பட்டதுடன் இது 2017 சனவரியின் 6.5 சதவீதத்திலிருந்து 2017 பெப்புருவரியில் (ஆண்டிற்கு ஆண்டு) 8.2 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் இரண்டையும் அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2017 பெப்புருவரியில் உயர்ந்த வீதமான 7.1 சதவீதத்தில் காணப்பட்டது. அண்மையில்

பணவீக்கத்தில் ஏற்பட்ட விரைந்த தன்மைக்கு வரட்சி நிலைமைகளும் வரி அமைப்பிற்கான சீர்திருத்தங்களின் தாக்கமும் பெருமளவிற்குக் காரணமாக இருந்ததுடன், மோசமான பணவீக்க எதிர்பார்ப்புக்களினால் தடங்கல்களெதுவும் ஏற்பட்டாலொழிய பணவீக்கம் இனிவரும் காலப்பகுதியில் விரும்பத்தக்க நடு ஒற்றை இலக்க மட்டத்திற்குத் திரும்புமெனவும் அதன் பின்னர் உறுதியாகக் காணப்படுமெனவும் எறிவுசெய்யப்பட்டிருக்கிறது.

மத்திய வங்கியினால் முன்னர் இறுக்கமாக்கப்பட்ட நாணயக் கொள்கையும் நாணய நிலைமைகளும் சந்தை வட்டி வீதங்களில் அதிகரிப்பினைத் தோற்றவித்து வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்படும் கொடுகடன் வளர்ச்சியின் மீது ஓரளவிற்கு தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது போல் தோன்றுகிறது. இதன்படி, தனியார் துறைக்கான ஆண்டிற்கு ஆண்டு கொடுகடன் வளர்ச்சி 2016 இறுதியின் 21.9 சதவீதத்திலிருந்து 2017 சனவரியில் 20.9 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை அரச துறைக்கான கொடுகடன் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து ஆண்டிற்கு ஆண்டு விரிந்த பணத்தின் வளர்ச்சி ($M_{2b}$) 2017 சனவரியில் 17.7 சதவீதத்தில் உயர்ந்த மட்டத்தை அடைந்தது. எனினும், இது 2016 திசெம்பரின் 18.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குறைவானதேயாகும். இருப்பினும், நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மெதுவானதாகவே காணப்பட்டது.

வெளிநாட்டுப் பக்கத்தில் சென்மதி நிலுவையின் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2015இன் ஐ.அ.டொலர் 8.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 9.1 பில்லியனைப் பதிவுசெய்தது. இதற்கு, இவ்வாண்டுப் பகுதியின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2.2 சதவீதத்தினால் சுருக்கமடைய இறக்குமதிகள் மீதான செலவினம் 2.5 சதவீதம் விரிவடைந்தமையே காரணமாகும். 2017 சனவரிக்கான தற்காலிகத் தரவுகளும் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைவதை எடுத்துக்காட்டின. சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள் சென்மதி நிலுவை மீதான வர்த்தகப் பற்றாக்குறையின் மோசமான தாக்கத்தினைத் தொடர்ச்சியாகக் குறைத்தன. அதேநேரம் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் 2017இன் தொடக்கத்தில் குறைவடைந்திருக்கின்றமை அவதானிக்கப்பட்டதுடன் ஐக்கிய அமெரிக்காவின் கொள்கை வட்டி வீதங்களின் அதிகரிப்புச் செய்யப்பட்டமைக்கிடையிலும் சிறிதளவு உட்பாய்ச்சல் காணப்பட்டிருக்கிறது. 2017 பெப்புருவரி இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017 பெப்புருவரி இறுதியில் ஐ.அ.டொலர் 5.6 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருக்கின்ற வேளையில் இலங்கை ரூபா 2017 மாச்சு 22ஆம் திகதி வரையான ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 1.2 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

மேற்குறிப்பிடப்பட்ட அபிவிருத்திகளைப் பரிசீலனையில் கொண்ட நாணயச் சபை 2017 மாச்சு 23ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில், மோசமான பணவீக்க எதிர்பார்ப்புக்கள் கட்டியெழுப்பப்படுவதையும் மிகையான பணவீக்கம் மற்றும் கொடுகடன் விரிவாக்கத்தினூடாக கேள்விப்பக்க பணவீக்க அழுத்தங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியத்தையும் கட்டுப்படுத்தும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையொன்றாக நாணயக் கொள்கையை மேலும் இறுக்கமாக்குவது அவசியமானது எனக் கருதியது. நாணயச் சபை 2016இன் ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாற்குறை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தமையையும் இதனைத் தோற்றுவித்த இறைத் தொழிற்பாடுகளின் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களையும் கவனத்திலெடுத்திருக்கிறது. சபையானது இம்முன்னேற்றங்கள் சந்தை வட்டி வீதங்களில் ஏற்கனவே அவதானிக்கப்பட்ட கணிசமான மேல் நோக்கிய அசைவுகளுடன் சேர்ந்து கொள்கை வட்டி வீதங்களில் தேவைப்படுத்தப்பட்ட சீராக்கங்களை குறைத்திருக்கின்றன என்ற கருத்தைக் கொண்டிருந்தது. இதற்கமைய நாணயச் சபை மத்திய வங்கியின்

கொள்கை வட்டி வீதங்களை அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் ஒவ்வொன்றையும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் 2017 மாச்சு 24ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 7.25 சதவீதத்திற்கும் 8.75 சதவீதத்திற்கும் அதிகரிப்பதற்கு தீர்மானித்திருக்கிறது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.75% |

| | |
|---|---|
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |